(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.

CC.No. 144/2020

DEPOSITION OF WITNESS FOR PW.1

Name சொக்கலிங்கம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2023

குறுக்கு விசாரணை

1.நான் வனத்துறை அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றள்ளேன். அந்த விவரத்தை எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் வன அதிகாரி என்று சொல்லவில்ரைல. அரசு ஊழியர் என்று சொல்லியுள்ளேன். சாட்சி மீண்டும் அரசு ஊழியர் என்று சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்தார்.

2.நானும் எதிரியும் பக்கத்து பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆனால் ஒரே பஞ்சாயத்து சேர்ந்தவர்கள். நாங்கள் இருவரும் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக நண்பர்கள். அந்த விவரத்தையும் எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3.பு.சா.ஆ.3 ஆவணம் 16.08.2019 அன்று நான் முதலில் அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பு என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பில் என்ன காரணத்திற்காக எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. பணம் தரவேண்டும் என்பதற்காக காசோலை கொடுத்தார்.

4.காசோலை கொடுத்த தேதி 22.06.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொடுத்த தேதியில் எனது வங்கி கணக்கில் பணம்இருப்பதாகவும், அதை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5.எதிரி எந்த காசோரைலயும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், எனது வங்கி கணக்கில் பணம் உள்ளது என்று எஉப்போதம் கூறவில்லை என்றால் சரியல்ல.

6.22.06.2019 அன்று பணம் இருப்பதாக கூறி கொடுக்கப்பட்ட காசோலையை ஏன் 09.08.2019 அன்று வங்கியில் தாக்கல் செய்த காரணம் என்னவென்றால் உடல் நிலை சரியல்லாத காரணத்தால் அன்று தாக்கல் செய்தேன். எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் தான் வங்கியில் தாக்கல் செய்ய காலதாமதம் ஆனது என்று எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7.நானும் எதிரியும் சொத்து சம்பந்தமாக ஒப்பந்தம் செய்துக் கொண்டதற்காக இக்காசோலை வழங்கப்பட்டது என்று எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் அது எந்த சொத்து சம்பந்தமானது அதன் விலாசம் என்னவென்றால் வீ.ஜி.என். ஐஸ்வரியா கார்டன், கோபரச நல்லூர், குமணங்சாவடி, காஞ்சிபுரம் மாவட்டம். பதவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண் ஞாபகம் இல்லை. கோபரச நல்லூர் கிராமத்தை சேர்ந்த சொத்து.

8. அந்த சொத்தின் ஆவணத்தின் நகலை நான் பார்த்துள்ளேன். அந்த சொத்து எந்த தேதயில் யாரிடமிருந்து எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

9.ஒரு சொத்து வாங்குவதற்கு பத்திரத்தை பார்க்காமல் ஒப்பந்தம் செய்வதில்லை என்றால் சரிதான். நான் அந்த பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10.பு.சா.ஆ.3 முன்னிலைக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.3 முன்னிலைக்கு தான் வழக்கு தாக்கல் செய்தது காலவரை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் இந்த வழக்கு நான் தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

11.நான் அந்த ஒப்பந்ததின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் காசோலை கொடுத்து விட்டு அந்த ஒப்பந்த பத்திரத்தை திரும்ப பெற்றுக் கொண்டார். இந்த விவரத்தில் எனது பிரமாண வாக்கு மூலத்திலோ, புகாரிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

12.நான் அது போல் குறிப்பிடவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 08.10.2018 அன்று எதிரியின் அலுவலகத்தில் ஒப்பந்தம் போடப்பட்டது.

13.அந்த சொத்தின் செக்பந்தி தெரியாது. சொத்தின் அளவு நீளம் அகலம் ஞாபகம் இல்லை.

14.அந்த மாதிரியான ஒப்பந்தம் எந்த காலத்திலும் ஏற்படவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15.ஒப்பந்த பத்திரம் என்னுடைய பெயரில் பதிரத எழுத்தர் திருமாரனிடமிருந்து ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதியிலேயே வாங்கப்பட்டது. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதியில் திரு.கே.முருகன், திரு.எஸ்.பூபதி அவர்கள் சாட்சியாக அதில் கையொப்பம் இட்டனர்.

16.திரு.கே.முருகன், திரு.எஸ்பூபதி அவர்களை சாட்சிய பட்டியலில் இணைத்ததற்கான காரணத்தினை எனது புகாரிலும் எனது முதல் பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் அது ஒப்பந்தம் சம்பந்தமான வழக்கு இல்லை என்பதால் காசோலை சம்பந்தமாக வழக்கு என்பதால் அதன் காரணத்தினை சொல்லவில்லை.

17.எதற்காக சாட்சிகளை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேன் என்ற காரணத்தை குறிப்பிடாதது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சாட்சிகளை எதிரிகளுக்கு இன்றைய தேதி வரையில் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. சாட்சிகள் இருவரும் தான் ஒப்பந்தத்தில் எதிரி அலுவலகத்தில் சாட்சியாக கையொப்பம் இட்டனர்.

18.அந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

19.எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே 6 வழக்குகள் உள்ளது. வரியவர் நிலை வழக்கும் நிலுவையில் உள்ளது. அந்த விவரங்களையும் எனது தாவாவிலும் எனது முதல் பிரமணா வாக்கு மூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் அது தனி வழக்கு.

20.அந்த வழக்கின் விவரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அது தனி வழக்கு இதில் சம்பந்தம் இல்லை. அந்த வழக்குகள் அனைத்தும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச.309 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டது. 23.11.2023 அன்று மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்பட்டது. அன்று குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் புசா.1 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்படும்.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyattam.